# யாழ் இந்திய துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

### ஊடக அறிக்கை

யாழ் இந்திய துணைத் தூதரகம் இந்தியாவின் 73வது சுதந்திர தினத்தை இன்று (15.08.2019) கொடியேற்றத்துடன் வெகு விமர்சையாகக் கொண்டாடியது. யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் இந்திய குடியரசுத் தலைவரின் உரையினை வாசித்தார். தூதரக அலுவலர்கள் வடமாகாணத்தில் வசிக்கும் இந்திய பிரஜைகள் மற்றும் இந்திய வம்சாவழியினர் ஊடகவியலாளர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2. வரவேற்பு நிகழ்வு மாலை 6.*00 மணிக்*கு Northgate Jetwing hotel ல் ஆரம்பிக்கப்பட்டது. முனைவர் பரிமள் அசோக் பட்கே மற்றும் குழுவினர் பரதநாட்டிய அளிக்கையை நிகழ்வில் வழங்கினர். வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானம் பிரதம விருந்தினராக பங்கேற்று துணைத் தூதுவர் பாலச்சந்திரனுடன் சேர்ந்து இயன்மொழி வாழ்த்தினை பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தெரிவித்தனர். வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சீ.வீ.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சித்தார்த்தன், முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், வடமாகாண சபையின் பிரதம செயலாளர் பத்திநாதன், ஆளுனரின் செயலாளர் சத்தியசீலன், கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன், மற்றும் மூத்த அதிகாரிகள், இந்திய பிரஜைகள் மற்றும் இந்திய வம்சாவழியினர், ஊடகவியலாளர்கள் 150ற்கும் மேற்பட்ட பலரும் கலந்து கொண்டனர்.

***